# திராவிடநாடு

24—2—63 | வார வெளியீடு | விலை 15 காசு



# முகப்பில்.....

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த வாழ்வு இன்று மாறி இருக்கிறது. முறைகளில் வடிவங்களில் இம்மாற்றம்காண்கின்றோமேயன்றி, மன உணர்ச்சிகளில் உணர்ச்சிகளைப் பின்னணியாகக், கொண்ட நிகழ்ச்சிகளில் பெரிய மாறுதல் ஒன்றும் காணோம் என்று தான் கூறவேண்டும்.

ஆணும் பெண்ணும் காதல் கொள்ளுவது அன்றும் இருந்தது; இன்றும் இருக்கிறது காதலில் வெற்றியும் தோல்வியும் என்றும் உள்ளவையே. காதல் கைகூடாதோ என்ற நிலை வரும் போது, எப்படியும் இணைந்தே வாழ்வது என்ற உறுதியோடு உள்ள காதலர்கள் வீட்டை விட்டு வெளியேறி விடுவதை இன்று 'ஓடிவிடுவது' என்கிறோம். 'ஓடிவிட்டாள்' 'ஓடிப் போயினர்' என்றெல்லாம் சொல்லி இழிவு சேர்க்க எண்ணுகின்றோம். இதேபோல் அன்றும், காதல் கைகூடாத நிலை ஏற்படுமாயின், காதலில் உறுதியோடு இருந்த தலைவனும் தலைவியும் பெற்றோர்க்குத் தெரியாமல் வெளியூர்க்குச் சென்று மணம் முடித்துக் கொண்டு வாழுவது உண்டு. அன்றைய தமிழர்கள் அதை உடன்போக்கு என்று அழைத்தனர். 'அவள் அவனுடன் போனாள்', 'அவன் அவளுடன் போனாள்' என்று மதிப்பான பொருளையே அத்தொடர் குறிக்கின்றது.

பொழுது புலர்ந்தது. ஊரெல்லாம் கடமைமேற் சென்றனர். ஆனால், ஒரு வீட்டிலே மட்டும் கலக்கம் நிறைந்திருந்தது. கலக்கத்திற்கு என்ன காரணம்? நேற்று வரை வீட்டில் எழில் ஓவியமாக இருந்தவளை அந்தக் குடும்பத்தின் இளஞ்செல்வியைக் காணோம்.

தந்தை, தமையன்மார்கள் தவிப்போடு இருக்கின்றனர். பெற்றவளாகிய நற்றாயும், பேணி வளர்த்தவளாகிய செவிலித் தாயும் தாங்கொணாத் துயரத்தில் கிடக்கின்றனர். என்ன செய்வது என்பது தெரியவில்லை. எங்கு சென்று தேடுவது என்பதும் புரியவில்லை. ஒரே குழப்பமான நிலை.

இந்நிலையில் தலைவியோடு நட்புக் கொண்டுள்ள தோழி உள்ளே வருகிறாள். செவிலித் தாயை அருகில் அழைக்கின்றாள் அவள் காதில் என்னவோ சொல்லுகின்றாள். செவிலியின் முகத்தில் இருந்த கலக்கம் மெல்ல மறைகிறது. முகத்திலே முறுவலும் தோன்றும் நிலை. அந்நிலையிலேயே பெற்ற தாயின் அருகில் செல்லுகின்றாள். 'என்ன?' என்று கேட்பதுபோல் பார்க்கிறாள் நற்றாய். அவள் பார்வைக்குப் பதில் உரைக்கின்றாள்:

> "தோழி, வீரக் கழலை அணிந்த அக்காளையோடு நின்மகள் செய்த நட்பு மெய்யாகிவிட்டது– நிச்சயமாகிவிட்டது. நாலூர்க் கோசரின் சொற்கள் எவ்வாறு உண்மையாகின்றனவோ, அதுபோல் அவளுடைய நட்பு உண்மையாகிவிட்டதே"

என்றாள். பெற்ற தாய்க்குப் பொருள் புரிந்துவிட்டது. அவள் மனக் கண்ணிலே தன்மகள் தலைவனோடு செல்லும் காட்சி தெரிந்தது. கல்லும் முள்ளும் நிறைந்த காட்டிலே, பொன் அனைய தன் மகள் போகும் நிலையை எண்ணிப் பெருமூச்சு விடுகின்றாள். செய்தி எல்லார்க்கும் தெரிகிறது. தெரிந்து இனி என் செய்ய இயலும்! அறிந்து அமைகின்றனர்.

ஆனால் மார்பிலும் தோளிலுமாக மாறி மாறிச் சுமந்த செவிலிக்கு மட்டும் மனம் ஆறவில்லை. அருமையாக வளர்த்த மகள் கானிடை கடுந்துயர் அடைவாளே என்று எண்ணி வருந்துகின்றாள். தலைவி, பாலையும் நிறைய இருக்கிறது வேண்டாம் என்று மறுப்பாள் மென்மையான உடலும் மனமும் கொண்டவள். ஆனால் இப்போதோ, உலர்ந்த கிளையை உடைய ஓமை மரத்தைக் குத்திய யானை, அதிலும் வேட்கை தணியாததினால், வானின் முழக்கத்தைக் கூர்ந்து கேட்டுக்கேட்டுத் தண்ணீர் (மழைநீர்) கிடைக்குமோ என்று ஏங்கும் அரியமலை வழியில் அவனோடு செல்லுதல் எளிது என்று நினைத்துவிட்டாளே. எப்படித்தான் அவள் மனம் அப்படி நினைக்கத் துணிந்ததோ தெரியவில்லையே" என்று புலம்புகின்றாள்.

'பாலும் பல என உண்ணாள்' இது பாவை வீட்டில் இருந்த நிலை; இப்போது ஆர்இடை (அரியவழி) செல்லத் துணிந்து விட்டாள். அந்த வழியோ வெப்பம் நிறைந்தது. ஓமை மரமும் வற்றியிருக்கும் வெப்பம் நிறைந்தது. அந்த வழியில் செல்லத் துணிந்துவிட்டாளே என்று செவிலி வாடுகின்றாள்.

ஆனால்,

அங்கு,

ஆர்இடையில்,

தலைவியும், தலைவனும் இரட்டை மாலைபோல் இணைந்து, (உடலாலும் உள்ளத்தாலும் என்றுபட்டுச்) செல்லுகின்றனர்.

இதுவே உலகம்!

✲

# அவள் வாழ்வு!

'அழகு பூத்தது' 'அழகு சிரித்தது' என்று கவிஞர்கள் அழகைப் பற்றி மொழிவார்கள் அல்லவா? அதைப்போலத்தான்என்றுகொள்ளுங் களேன்.

பொதிகைத் தென்றல், அந்தப் புன்னைவன நகருக்குள் தன் சிறப்பை யெலாம் அள்ளி வீசியவண்ணமிருந் தது. எண்ணமுடியாதமணிக்கணக்கில் அந்தச் சிலைவடிவாள் தன்வீட்டுத் தோட்டத்தில் மலர்ந்திருக்கும் முல்லை மலரைத் தன்னழகோடு ஒப்பிட்டுக் கொண்டிருந்தாள். இயற்கையின் அள்ளித் தெளித்த அழகை அவள் மட்டுமா நுகர்ந்துகொண்டிருந்தாள்; அவள்மட்டும் அந்தத் தென்றலின் இனிமையையும், இளமரக்காவின் இன்பத்தையும் நுகரவில்லை. பலரும் சூழ நின்ற அவளின் அருகில் கணவன் மழவன் நின்றுகொண் டிருந்தான்!

"கோமு" என்று உள்ளத்து ஆசை யெலாம் சேர அழைத்தான்.

"என்னத்தான்" கனிந்த மொழி யால் பகன்று கண்களை அசைத்தாள்.

"நமது மணம் முடிந்தபின்தானே இந்த முல்லைக்கொடிக்கும் மணம் நடந்தது" அவன் கேட்டான்.

"உங்களுக்கு நினைவாற்றல் குறைவு" அவள் சொன்னாள்.

"அடடா! அதுக்குள்ளே மறந்து விட்டேன். பற்றிக்கொண்டு படரக் கொம்பின்றித் தவித்த அக்கொடிக்கு நான் வந்த மறுநாள்தான் வழி பிறந் தது. நான் உன்னை மணக்கவில்லை யெனில், அதுவும் மணமின்றித் தவித் துக்கொண்டிருக்கும்" முல்லைக் கொடிக்கு முங்கிற்பந்தல் போட்டுக் கொடுத்ததைப்பற்றிக் கூறிப் பெருமையடித்துக்கொண்டான்.

"ஆமாம், உங்கட்குத் தற்பெருமை அதிகம்!"

"கோமு! என்னிடம் அப்படி என்ன பெருமை உண்டு"

"நானும்தான் அதற்கு வாழ்வு கொடுப்போம் என எண்ணினேன். அப்போதுதானே நீங்களும் எண்ணி னீர்கள். அதன்பின்தானே இதெல் லாம்......" எங்கேயோ எண்ணம் வைத்துப் பேசினாள்.

"அப்படியானாலும், நான் உன்னரு கில் இருக்கப்போய்த்தானே நீ எண் ணினாய். உன் எண்ணத்துக்கு மூல காரணம் நான்தானே" அவன் சொன்னான்.

**பாண்டியன்**

"இந்த ஆண்கள் தங்களை ஏதோ பெரிசா எண்ணிப் பேசிக்கிட்டு இருக் காங்க. காரணமின்றிப் பெண்கள் சுதந்திரத்தில் தலையிட்டு மூக்கறுபடு றாங்க......" அடித்துப் பேசினாள்.

"பொறு பொறு, இப்ப நீ என்ன சொன்னே!" அவன்.

"எங்கள் மாதர் சங்கத்தில் அன் றைக்கு எங்கள் தலைவி பேசினார்கள்– உடனடியா......"

"உடனடியாக எல்லோரும் சேர்ந்து......"

"சேர்ந்து......'

"ம்...ம்...ஊகும்......"

"பொறு...பொறு...ம்..."

"கைகொட்டினார்கள்" படீரென வார்த்தைவிட்டான்.

"அடடே! இதுதானா உங்கள் பொம்மலாட்டம். உங்களைத் தெரி யாதா! இந்தப் பெண்களின் வாய் வீச்சும் வம்பும், வரட்டுக்கவுரமும்".

"ஆம், இந்த ஆண்களை நாம் சவா லுக்கு அழைக்கும் நிலைமையை நமது சங்கங்கள் மூலம் ஏற்படுத்தியாக வேண்டும். நாடெங்கும் மாதர் மன் றங்கள் பெருகி நம்மைச் சிறிதும் பொருட்படுத்தாத இந்த ஆண் வர்க் கத்தை......":

"தொலைத்துக்கட்டப் போகி றீர்களா? இப்படிப் பேசியது யாரோ"

"எங்கள் தலைவி திருமதி..."

"போதும். அந்தப் பரிதாபத்துக் குறியவர்கள் பெயரைச்சொல்ல வேண்டாம்"

"அத்தான்"

"ஆமா! இப்பொழுது பாரதி பிறந்த நாள் வருகுது, அதற்கு உங்கள் சங் கம் என்னசெய்யப்போகுது"

"அன்றைக்கு பலத்தவிழா, கொண் டாட்டம் நடைபெறும்"

"அப்படி என்ன இந்தப் பெண்கள் செய்திடப்போறாங்க" வாயைக் கிள றினான்.

"இந்த நாட்டுப் பெண்களை இந்த நாட்டு ஆண்களே மதித்து நடக்க வில்லையென்றால், வேறு யார் மதிப் பாங்க?"

"போதும் நிறுத்து. பெண்களைப் பெருமைசெய்து பாடியவன் ஆண் கவிதானே"

"ஏன் பாடினன்?"

"பெண்களைப்பாட எண்ணினர்' பாடினர்"

"அதுதான் இல்லை, பெண்களும் வல்லமைபடைத்தவர்கள், அவர்களும் உலக நலத்தில் பங்குகொள்ளவேண்டும். ஆணும் பெண்ணும் சமநிகரானவர்கள், அப்பொழுதுதான் நாட்டின் பண்பு தெரியும். பெண்களே அடுப்பூதியதுபோதும்; அணிவகுத்து வருக' என்றான்.

"புரியுது. பெண்களைப்பார்த்து இப்படிப் பாடியிருப்பான் எனக்கனவு காண்கிருயா?"

"ஏன் நாங்கள் கனவு காண்கிறோம். இன்றைக்கும் நாங்கள் ஆட்சி நடத்தும் எத்தனையோ நகராட்சி ஊராட்சி மன்றங்கள் உண்டே!'

"சரி சரி, உங்கள் வீரப் பிரதாபங்களை விவரிக்க வேண்டாம்"

"ஆண்களைவிடப் பெண்கள் எவ்விதத்திலும் குறைந்தவர்களில்லை"

"அதுதான் பார்த்த உடன் தெரியுதே"

"நமக்குள் ஏன் வம்பு? உலக மக்களெல்லாம் சகோதரர்களாகப் போகிருர்கள் எங்கும்!"

"சமாதானமா"

"யாராவது ஒருவர் விட்டுக் கொடுத்தால்தானே சமரசம் நிறைந்திருக்கிறது"

"ஆகா!"

"அத்தான்"

"இதுகாறும் அத்தான் என்று அழைக்கவில்லையே"

"வாதம் செய்ததில் அது வரவில்லை.

"பார்த்தாயா பெண்களின் மதியே தனிச் சிறப்புடைத்து"

"ஏன் வீண் புகழ்ச்சி!'

"உனக்குப் பேசக் கற்றுக் கொடுத்தது யார்?"

"எங்கள் சங்கம்"

"உங்களைப் போன்ற எழுத்தாளர்கள் எங்களைப் போற்றி எழுதவேண்டும் அத்தான்"

"எழுத்தாளன் எழுதுவான்—இருப்பவர்கள் ஒழுங்காக இருந்தால், வெறும் புகழ்ச்சிக்காக நான் எழுத மாட்டேன். என் நாட்டுப் பெண்கள் தங்கப் பதுமைகளாய், தாய்மைச் சிகரங்களாய், பெண்மைப் பளிங்காய் இருந்தால், அவர்களைப்பற்றி எழுதிக் கொண்டே இருப்பேன்."

"உங்கள் சொல்வரிசையே அலாதி தான்"

"இல்லை; எனக்கு பேச்சு இன்னும் நன்கு திருந்தவில்லை. ஆனுல் உன் குரல் எனக்கு மணக்கிறது கோமு"

"அதோ நாம் அமைத்த பந்தலில் பற்றியிருக்கும் முல்லை மலர் அல்லவா மணக்கிறது"

"இல்லை; அம்மணம் வேறு, உன்னிடம் உள்ள மணம் அதைவிடச் சிறந்து கமழ்கின்றது" சிலேடையாகப் பேசினன்.

"மனைவியைக் கணவன் புகழ்ந்து கூறலாமா"

"அதனுல்தானே இல்லறம் ஒரு விதத்தில் சிறப்படைகிறது"

"கணவனை மனைவி புகழலாமா"

"அப்பொழுதுதான் பெண்மை ஒளி வீசும்"

மயக்கமடைந்தவளாய் 'அத்தான்' என்ருள்.

"கோமு" என்றபடி அவளருகில் சென்ருன்.

அவன் கைகளிலே அவள் தவழ்ந்தாள்.

மதிய உணவுக்கு இருவரும் சென்றனர்.

சுமார் இரண்டு மணி இருக்கும்.

ஐம்பது வயதுக்கு மேற்பட்ட மாது ஒருவள் 'கோமு' என்று வாயிற்படியில் நின்றபடி அழைத்தாள்.

மழவன் தன் நாற்காலியில்அமர்ந்து எதையோ எழுதிக்கொண்டிருந்தான். அக்குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

கோமு வாயிலுக்கு விரைந்து கொண்டிருந்தான். அம்மாதிடம் எதையோ உரையாடிவிட்டுத் திரும்பினுள்.

"அத்தான்" என்றழைத்தவண்ணமாய் அவன் அறையின் முன் நின்ருள்.

"தடையென்ன பதுமையே! வருக! வருக!" என்ருன்

"அத்தான், இப்பொழுது வந்த பெண்கள் ஓர் சேதிகொண்டு வந்தார்கள்..."

"என்ன சேதி? நான் அறியலாமா?"

"எங்கள் மாதர்சங்க அவசர செயற்குழுக் கூட்டம் இன்று நான்கு மணிக்கு நடக்கிறதாம். அதுதான் பணிப்பெண்ணுன அவர்களெனக் கூட்டத்துக்கு அழைத்துவிட்டுச் செல்கிருர்கள்."

"அப்படியா ......" கூறிவிட்டு எதையோ தீவிரமாக எண்ணினுன்.

"ஏன் யோசிக்கிறீர்கள்......"

"ஒன்றுமில்லை. அந்த அம்மாள் ஓர் பணிப்பெண் என்ருயே அதை எண்ணினேன்"

"ஏன்? அதற்கென்ன"

"காலையில் சொன்ருய் ஆணுக்குப் பெண் அடிமையா? அதை ஒழிக்கப் படை திரட்டுவதாக ஆனுல் பெண்களுக்குள்ளே பணிப்பெண், பணியாத பெண், பணிக்கும் பெண் என்றெலாம் வேறுபாடு ஏன் என்றுதான் கேட்க விரும்பினேன"

"இதனுலென்ன"

"நீங்கள் அதற்கெனத் தனியாக ஆள் வைத்திருப்பது எனக்குச் சரியாக இல்லை.

"பின் அதைச் செய்வது யார்?"

'நீங்கள் ஒவ்வொருவரும் பணிப்பெண்ணுக மாறவேண்டும், தலைவியும் நீங்கள், பணிபுரியும் பெண்களும் நீங்களே. எதற்கும் தயாராக இருக்க வேண்டும். தினமும் ஒருவர் வீதம் உங்கள் மன்றத்தில் இதர பணிகளைச் செய்ய நீங்களே முன்வரவேண்டும். இவ்விதமான முறையில் இயக்கினுல் சிறந்து விளங்கும்.

"இதற்கு நான் போய்வந்து பதில் உரைப்பேன்" எனக் கூறிவிட்டு விடைபெற்ருள்,

அவள் சென்றவுடன், மழவன் பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள், எழுதும் பணியைத் தொடர்ந்தான். பாரதியின் சிறப்பியல்புகள். அவர் சமதர்ம நோக்கு. அவர் கனவுகள். சீர்திருத்தக் கருத்துக்கள், அவர் தத்துவங்கள் இப்படியாகப் பாரதி சிறப்புமலருக்குக் கட்டுரை வரைந்தான்.

எழுதிக்கொண்டேயிருந்ததில் நேரம் சென்றதுதெரியவில்லை சிரித்த முகமாய் கோமதி அவன் முன்வந்து நின்ருள்.

"அத்தான்! இருட்டத்தொடங்கிவிட்டது. இன்னும் எழுந்திருக்கவில்லையா? சுவைநீர் கொண்டுவரட்டுமா?"

(13-ம் பக்கம் பார்க்க)

# மகிழ்ச்சி! நன்றி!

மலர் 21] ஆண்டு சந்தா ரூ. 8 (24—2—63) தனிப்பிரதி 16 காசு [இதழ் 26


மருட்டும் செய்தி வந்தது; முதலில்; இந்தி வெறியர்களின் எதிர்ப்புக்கு அஞ்சி, ஆங்கிலத்தை இணைமொழியாக நீடித்திருக்கச் செய்வதற்காகக் கொண்டுவரப்பட வேண்டிய, மசோதா, ஒத்திவைக்கப்பட்டுவிடும் என்று. மனமிக நொந்தநிலை பெற்றோம்; மாண்புமிகு வாக்குறுதியும் மண்ணாகிப் போகிறதோ என்று அஞ்சினோம்.

இல்லை! இல்லை! ஐயம்கொள்ளற்க! அச்சம்கொள்ளற்க! ஆங்கிலம் இணைமொழியாக நீடிப்பதற்கான மசோதா, ஒத்திவைக்கப்படப்போவதில்லை, ஏப்ரல் திங்கள் இறுதியில், கொண்டுவரப்படும் என்று அறிவித்துள்ளார் பண்டித நேரு. மகிழ்ச்சி! நன்றி!

பண்டித நேருவின் போக்குக்கு எதிராகக் கிளர்ச்சி நடத்திட இந்தி ஏகாதிபத்திய நோக்கினர் முயற்சிக்கக்கூடும்; கூறுகின்றனர்.

அஞ்சப்போவதில்லை! என்று அறிவித்திருக்கிறார், பண்டித நேரு. மகிழ்ச்சி! நன்றி!!

# மார்ச் ஆறும் நாள்

பசி
பிணி
பகை

எனும் மூன்று கேடுகளும் அற்ற இடமே நாடு என்று வள்ளுவர் இலக்கணம் வகுத்தார்.

கோட்டை
கொத்தளம்
அரண்
அரண்மனை
மாடமாளிகை
கூடகோபுரம்
அங்காடி
கலைக்கூடம்

இவைகளை அணியாகக்கொண்டது நாடு, என்றாரில்லை; அங்கு பசியும் பிணியும் பகையும் இருத்தல் ஆகாது என்றார்.

அந்த மூன்றிலும், பசியைத்தான் முன்னதாகக் கூறினார், பசி வந்திடப் பத்தும் பறந்துபோகும் என்பதால்.

மக்கள் வாழப்பிறந்தவர்கள் பசியின்றி, பிணியின்றி, பகையின்றி!

மக்களுக்குத் தக்க வாழ்விடமாக இருக்கவே நாடு. மலையும் மடுவும் தருவும் பிறவும் மட்டும் நிரம்பிய மண் வெளி அல்ல, நாடு—மக்களின் வாழ்விடம்.

இடம்—வெளி—நாடு எனும் எவையும் நிலப்பரப்பினைத்தான் காட்டுகின்றன எனினும், பசி பிணி பகையற்று மக்கள் வாழ்வதற்கான முறைகண்டு அதனை நெறியாகக்கொண்டு இறை நடாத்தப்படும் இடமே நாடு எனும் தனிப்பெயர் பெறுகிறது.

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழ்த்தரணியில் திகழ்ந்த இச்சீலமிகு கருத்து, இன்று, உலகநாடுகள் பேரவையின் உயர்தனிக் கருத்தாகி மிளிரக்காண்கிறோம், உவகைகொள்வதுடன், பேரறிவாளர் பலர் கூடிப் பாரினுக்கு அறிவுறுத்தும் இப்பேருண்மை, தமிழகத்தில் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே இருந்தது என்பதனை உணரும்போதுபெருமிதம் எழத்தான்செய்கிறது.

பசி, பிணியையும் பகையையும் மூட்டிடத்தக்கது—எனவேதான் வள்ளுவர் அதனை முன்னதாக்கி, மற்ற இருகேடுகளையும் தொடர்ந்து கூறினர்.

மார்ச்சுத் திங்கள் ஆறும் நாள் பசிக்கொடுமை யற்று, பாரிலுள்ளோர் வாழவழி காணவேண்டும் எனும் பொது மறையை, உலகுக்கு உணர்த்தும் நாளாகக் கொள்ளவேண்டுமென, உலக நாடுகள் பேரவை, (ஐக்கியநாடுகள்சபை) அறிவித்திருக்கிறது.

உலகிலே உள்ள வளம் குறைவானதன்று, எல்லோரும் இன்புற்று இருந்திடத்தக்க அளவும் வகையும் கொண்டதாகவே உளது.

கண்டறிந்துள்ள வளத்தைவிடக் கண்டறிய வேண்டுவன நிரம்ப உள.

சிப்பிக்குள் முத்து இருத்தல்போல, அரும்புக்குள் மணம் தூங்கிக்கிடத்தல்போல, இயற்கையின் மடியில் எண்ணற்ற வளங்கள் பல்வேறு வகையினதாய், விதவிதமான வடிவங்கள் கொண்டனவாய் உள்ளன.

உழைப்பின்மூலம் இந்த வளங்களைப் பெறவும், பெருக்கவும் முடிகிறது.

உழைப்புடன் விஞ்ஞானம் தந்திடும் கருவிகளும் முறைகளும் இணைந்திடும்போது வளம் காணும் வாய்ப்பு பன்மடங்கு அதிகமாகிறது.

அதனையும் திட்டமிட்டுச் செயல்படுத்தும்போது, வளம் நிரம்பக் கிடைக்கிறது.

வளம்காண வழி தேடிடும்போது தனித்தனி மனித முயற்சியாக மட்டும் அமையாமல் கூட்டு முயற்சியாக அஃது அமைவது சாலச் சிறந்தது என்பது விளங்குகிறது. கூட்டு முயற்சியால் வளம் காணும்போது, அந்த வளம் அனைவருக்கும் பயன்படும் முறை வகுத்து, அதனைக் காத்திடல் வேண்டும்—இல்லையேல், கூட்டு முயற்சி குலையும், கேடு சூழ்நிலை எழும், நாடு களமாகும்; பசி பிணி பகை படை எடுக்கும்; பார் அழியும்.

அழியும் என்கிறோம் நாம்—அழிப்போம் என்றார் பாரதியார்.

தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில்
ஜெகத்தினை அழித்திடுவோம் என்றார்.

வள்ளுவரோ, மிக வேகமாகச் சென்றார், வேகம் மிகக் குறைவு என்று கூறப்பட்ட நாட்களிலேயே,

இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்
பரந்து கெடுக, **உலகியற்றியான்**

என்று கூறினார். இடும்பை கூர் என் வயிறே! என்று அலறினார் ஒருவர்! பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ என்று வினவினர் மற்றொருவர். முற்றும் துறந்திடக் கிளம்பினோர்கூட, கனியேனும் செங்காயேனும் கந்த மூலங்களேனும் பெற்றாக வேண்டுமென்ற விழைவைத் தெரிவித்தனர். பசியின் கொடுமைபற்றிப் பலப்பலக் கூறத் தேவையில்லை — கூறப்பட்டுள்ளவை ஏராளம்.

ஏன், சிலர் பசிக்கொடுமைக்கு ஆளாக நேரிட்டுவிடுகிறது. இல்லாமை அதற்குக் காரணம்! இல்லாமை எனின் என்ன? அவனிடம் **இல்லாமை**, அவனியில் இல்லாமை அல்ல!!

இல்லாமை என்பதன் முழுப்பொருள், இருப்பது அவனிடம் இல்லாமல், வேறு பலரிடமோ சிலரிடமோ இருக்கிறது என்பதாகும். பாரினில் உள்ளோர் அனைவருக்கும் பசி தீர்க்கத்தக்க அளவு வளமும் அதன் பயனும் நிரம்ப இருக்கிறது; ஆனால், அது பகிர்ந்து அளிக்கப்படாததால், பரவிடும் முறையிலே குறை ஏற்பட்டுவிட்டதால், சிலருக்கு, 'பாலிருக்கும் பழமிருக்கும், பசியிருக்காது' எனும் நிலையும்; பலருக்கு, 'கல்லைத்தான் மண்ணைத்தான், காய்ச்சித்தான், குடிக்கத்தான் கற்றேனா'' என்று மனம் வெதும்பிக் கேட்கும் நிலையும் இருந்திடக் காண்கிறோம்.

ஒருபுறம் களஞ்சியம், பிறிதோர்புறம் காய்ந்த வயிறு!

ஒருபுறம் ஒய்யார வாழ்வினர், மற்றோர் புறம் ஒட்டிய வயிறினர்.

இது சீர்கேடு மட்டுமல்ல, சீர் குலைவு.

இறைமாட்சியே, இந்தச் சீர்குலைவினை நீக்குவதைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

ஆனால், நடைபெறுவது என்னையோவெனில், உடைமைகளை உடையவர்கள் பாதுகாத்துக்கொள்ள அரசு பயன்படும் அளவுக்கு, இல்லாமையால் இடர்ப்படும் மக்களை ஈடேற்றப் பயன்படுவதில்லை.

ஒருவேளைச் சோறிட்டிருந்தால், உயிர் துறந்திருக்க மாட்டான் ஒருவன்—அதற்கு ஓர் ஐம்பது காசுகள் செலவிட்டிருப்பின் போதுமானதாக இருந்திருக்கும்—அரசு அதனை, உரிய காலத்தில், தக்க விதத்தில் செலவிடுவதில்லை, செலவிடுவது தனக்குள்ள நீங்காக் கடமை என்றுகூட எண்ணுவதில்லை; ஆனால் அவன் இறந்துபட்டால், ஏன் இறந்தான் என்று கண்டறிய, பிண பரிசோதனைக்குக் குறைந்தது பத்து வெண்பொற் காசுகளைச் செலவிட முன் வருகிறது; அதற்கான முறை இருக்கிறது. ஐம்பது காசு செலவிட்டு ஒரு உயிரைக் காத்திட வழி செய்யாத அரசு, ஆயிரம் காசு செலவிடுகிறது, அவன் ஏன் செத்தான் என்று கண்டறிய! அறிவீனம் என்பதா, கொடுமை என்பதா? என்னென்பது இந்தப் போக்கினை.

அவனவன் வாழ்வது அவனவன் பொறுப்பு.

ஒருவனை ஒருவன் அடித்துக் கொள்ளாமல் பார்த்துக்கொள்வதும், ஒருவர் உடைமையை மற்றொருவர் கைப்பற்றாமல் பார்த்துக் கொள்வதும் அரசின் கடமை.

இஃது நெடுங்காலமாகப் பல அரசுகள் மேற்கொண்டுவிட்ட முறை.

தவறு என்று இடித்துரைத்தார் வள்ளுவர்.

ஆம்! தவறுதான்! என்று அறிவுறுத்துகிறது, உலக நாடுகள் பேரவை.

பசியைப் போக்குவதும் அரசின் கடமை—இதனை இன்று அரசின் கடமைகளிலேயே, தலையாயது என்றும் கொண்டுவிட்டுள்ளனர்.

கொண்டுவிட்டுள்ளனர் என்று மட்டுமே கூறினேம், செயல்பட்டுவிட்டனர் என்று செப்பிடவில்லை—செயல்படவேண்டும் என்று வலியுறுத்தவே, மார்ச் 6-ம் நாள்.

மனிதன் வாழப்பிறந்தான் என்றோம்; வாழமட்டும் அல்ல, வாழ்விக்கவும் பிறந்தான்.

மதலையை வாழ்விக்கும் தாயே கூறுகிறாள், 'எனை வாழ்விக்கவந்த கோவே!' என்று. வாழ்வு, தொடர்கதை. வாழையடி வாழையாக உள்ளது; வாழ்வோர் மற்றவர்களை வாழவைத்திடவேண்டும், அவர்கள் மற்றவர்களை, இப்படிச் செல்கிறது அந்த நீண்ட தொடர்கதை.

(12-ம் பக்கம் பார்க்க)

# ஊரார் உரையாடல்

## ஒற்றன்

கருத்தூரார்:

மகா பெரிய உபதேசம் செய்கிருய், சமயம் கிடைக்கும்போதெல்லாம் — மொழி வெறி கூடாது, பிரதேசப் பித்து ஆகாது, காட்டுச் கூச்சல் கூடாது, கலகம் செய்வது தீது என்றெல்லாம்......

கதரூரார்:

என்னய்யா கொதிக்கிறீர்! நல்லது சொல்கிறேன் —நானென்ன குருவா உபதேசம் செய்ய? என் மன துக்கு, என் மனதுக்கு மட்டுமல்ல, சராசரி அறிவுள்ள எவர் மனதுக்கும் நியாயம் என்று படுகிற நல்லவை களை எடுத்துச் சொல்கிறேன் — இதற்கு ஏன் எரிந்து விழுகிறீர், என் மீது?

கருத்தூரார்:

பேசுகிறது தப்பு என்று சொல்லவில்லை, ஐயா பெரியவரே! மொழி வெறி, பிரதேசப் பித்து இதெல்லாம் கூடாது என்று, இங்கு, எங்களுக்குக் கூறுகிற வாய், உள்ளபடி மொழிவெறி தலைவிரித்தாடுகிறபோது ஏன் தன்னாலே மூடிக்கொள்கிறது என்றுதான் கேட்கிறேன்.

கதரூரார்:

விளக்கம் சொல்லும்; புதிர்போட்டுப் பேச வேண்டாம்.

கருத்தூரார்:

தவறு எங்கு இருந்தாலும் கண்டிக்கவேண்டியது தானே?

கதரூரார்:

சந்தேகமில்லாமல்! எங்கு இருந்தாலும் தவறு கண்டிக்கப்படத்தான் வேண்டும்.

கருத்தூரார்:

தவறு செய்பவர், யாராக இருந்தாலும் கண்டிக்க வேண்டியதுதானே?

கதரூரார்:

ஆமாம்—நிச்சயமாக! தவறு செய்பவர் யாராக இருந்தால் என்ன? மொழி வெறி, பிரதேசப் பித்து எவரிடம் கிளம்பினாலும், கண்டிக்கவேண்டியதுதான்.

கருத்தூரார்:

கண்டிக்கத் தவறமாட்டீர் அல்லவா! இடம், மேலா, கீழா? ஆசாமி சாமான்யமா, கனமா? என்றெல்லாம் தயக்கம் எழக்கூடாதல்லவா?

கதரூரார்:

கூடவே கூடாது.

கருத்தூரார்:

அமைதியாக நியாயம் பேசுகிறீரே, நடைபெற்ற அக்ரமத்தைக் கண்டிக்க வாய் திறந்தீரா? துணிவு வந்ததா? ஏனய்யா, ஏதும் தெரியாதவர்போல விழிக் கிறீர். பீகாரில், உத்தரப்பிரதேசத்தில், மொழி வெறி தலைவிரித்தாடிற்றே...

கதரூரார்:

ஓஹோ! அதைச் சொல்கிறீரா? பார்த்தேன், பத்திரிகையில்.

கருத்தூரார்:

பார்த்தீரா, பத்திரிகையில்! பசுபதி மடத்தில் பாரா யணம், பட்டமளிப்பு விழாவில் சதிர்க் கச்சேரி, பட முதலாளியின் நன்கொடை என்று பல செய்திகளைப் பார்த்ததுபோல, இந்தச் செய்தியையும் பார்த்தீர் போலிருக்கிறது. எவ்வளவு சாவதானமாகச் சொல் கிறீர் ஐயா! பார்த்தேன் பத்திரிகையில் என்று. ஒரு மாநிலத்துக்குக் கவர்னர், பாராளுமன்றச் சபாநாயக ராக இருந்தவர், பாரிலே பலபகுதிகள் சென்று வந்தவர், அனந்தசயனம் ஐயங்கார், அவருக்கு 'இந்தி'யில் படிக்க முடியவில்லை, உரையை; அதற்கு, மொழிவெறி காரண மாகக் காட்டுக்கூச்சல் கிளப்பி, அவரைப் பேசவிடாமல் தடுத்துவிட்டனர் — அந்தப் பதவிக்கே ஒரு இழுக்கு ஏற்படத்தக்கவிதமாக. பார்த்தேன் பத்திரிகையில், என்று பேசுகிறீர். பதறவேண்டாமா, மனம். கிளம்ப வேண்டாமா, கண்டனக் கணை......

கதரூரார்:

கண்டிக்கத் தக்கதுதான் — பீகாரிலும் உத்தரப் பிரதேசத்திலும் நடைபெற்ற நிகழ்ச்சிகள்......

கருத்தூரார்:

நிகழ்ச்சிகள் மட்டும் அல்ல அய்யா அவை; நிலைமைகள்; நினைப்புகள். அந்த மொழி வெறி பிடித்

தவர்களின் நினைப்பு, தமது தாய்மொழியான இந்திக்கு எல்லோரும் தலைவணங்கியாக வேண்டும் என்பது. அங்கு உள்ள நிலைமை, பிறமொழியாளர்களை, மட்டரக மானவர்கள் என்று திட்டவட்டமாகக் கருதச் செய்கிறது......

கதரூரார்:

அதெல்லாம் கூடாதுதான். யார் ஒப்புக்கொள்வார்கள் அந்த நடவடிக்கைகள் சரியென்று......

கருத்தூரார்:

இங்கு யாராவது, தமிழ் ஆட்சிமொழியாக வேண்டும், பாடமொழியாக வேண்டும் என்று பணிவாக, கனிவாகக் கூறினாலும், கிளம்பிவிடுகிறீர்கள் உபதேசம் செய்ய—மொழிவெறி கூடாது என்று. மிக மிகமோசமான முறையிலே மொழிவெறி வேறு இடங்களிலே தலைவிரித்தாடுகிறது, ஒரு கண்டன அறிக்கை உண்டா? தலைவர்கள் இந்தப் போக்கைத் தடுக்க முயற்சிக்கிறார்களா? ஏதோ, பத்திரிகைகளில், கண்டனம் வெளியிட்டார்கள், இதழாசிரியர்கள், நியாய உணர்ச்சியுடன். நாட்டின் தலைவர்கள், நாட்டுக்கு நல்லறிவு அருளவே பிறந்திருப்பதாகக் கருதிக்கொண்டிருக்கும் பெரியவர்கள் கண்டித்தார்களா? இல்லை! ஏன்? பாதிப்பேருக்குமேல், அதே மொழி வெறி கொண்டவர்கள், மற்றப் பாதியினர், இந்திமொழியாளர்களிடம் வம்பிலே மாட்டிக்கொள்ளக் கூடாது என்று எண்ணும் பயம்பிடித்தவர்கள். உத்தரப்பிரதேசம் என்றாலே, உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை ஆடுகிறது, அவர்களில் சிலருக்கு......

கதரூரார்:

உத்தரப்பிரதேசமானால் என்ன, மத்தியப்பிரதேசம் ஆனால் என்ன......

கருத்தூரார்:

பேசலாமய்யா அதுபோல! ஆனால் நிலைமை அது அல்ல. நினைவிலிருக்கிறதா, T. T. K. சொன்னது, முன்பு; பாராளுமன்றத்தில்.

கதரூரார்:

T. T. K. என்ன சொன்னார் என்கிறீர். அவர் எது சொன்னாலும் தரமாகத்தான் இருக்கும்—என்ன சொன்னார்?

கருத்தூரார்:

அதைச் சொல்லட்டுமா? உத்தரப் பிரதேசத்தைப் பற்றி அவருக்கு உள்ள எரிச்சலைக் கொட்டிக் காட்டினார். இந்தியாவுக்குப் பாரதம் என்றும் ஒரு பெயர் உண்டல்லவா? அதை நையாண்டி செய்கிறமுறையில் T. T. K. சொன்னார், "இந்தியா — அதாவது பாரதம் — அதாவது உத்தரப்பிரதேசம்!'' என்றார்.

கதரூரார்:

"ஹாஸ்யமாகச் சொல்லியிருக்கார். T. T. K. நல்ல ரசிகர்...தெரியுமே!

கருத்தூரார்:

அட உன் ஹாஸ்யமும் ரசனையும் கிடக்கட்டும் ஒரு புறம்! அவர் பேச்சிலே தொக்கி இருக்கிற அரசியல் பாடத்தைப் பாரும். இந்தியா என்றாலோ, பாரதம் என்றாலோ, உத்தரபிரதேசம் என்றாலோ, ஒரே பொருள் தான்—என்று கூறினார். உத்தரபிரதேசத்துக்கு உள்ள அளவற்ற செல்வாக்கை இடித்துக்காட்டினார். அந்த உத்தரபிரதேசத்தில், இந்தியில் பேசமுடியாத கவர்னரை உட்காரவைத்துவிட்டார்கள், கூச்சலிட்டு. மொழி வெறி அப்படித் தலைவிரித்து ஆடுகிறது அங்கெல்லாம். இங்கு நீங்கள், சாந்தி, சமரசம், சன்மார்க்கம் போதிக்கிறீர்கள்—எங்களுக்கு.

கதரூரார்:

பீகாரிலும் உத்தரப்பிரதேசத்திலும் நடந்தது 'ரசாபாசம்'தான்.

கருத்தூரார்:

வெறி என்று அடித்துச்சொல்லுமே, ஐயா! ஏன் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் திண்டாடுகிறீர். அங்கு உள்ளவர்களைக் கண்டிப்பது என்றால் அவ்வளவு பயம்......

கதரூரார்:

பயம் என்று சொல்லிவிட முடியுமா...பயம் என்ன அவர்களிடம்!

கருத்தூரார்:

அப்போது 'பாசம்' என்று சொல்லவா, அதனை? பயமோ, பாசமோ, எதாகவோ இருக்கட்டும், அங்கு மொழி வெறிபிடித்து அலையும்போது, உம்மைப்போன்றவர்கள், கண்டிக்க முன்வருவது இல்லை. இங்கு, தமிழ்ப் பற்றுக் காட்டினாலேபோதும், தொடைதட்டிக்கொண்டு கிளம்பிவிடுகிறீர்கள், மொழி வெறி கூடாது, மிகத்தீது, அறவே ஆகாது என்று முழக்கமிட. இப்போதாவது சொல்லுங்கள், இங்கு தமிழ்மொழி வளருவதற்காக வழி கூறுபவர்களை, பற்றுக்கொண்டவர்களை, மொழிவெறி கொண்டவர்கள் என்று தூற்றுவது, தவறுதானே?

கதரூரார்:

மொழிவெறி ஏற்பட்டுவிடக்கூடாதே என்ற கவலை தான் எமக்கெல்லாம். இப்போது தமிழ்ப்பற்று என்ற அளவுக்கு இருக்கலாம்—இருக்கிறது என்றே வைத்துக் கொள்வோம். ஆனால் இதை வளரவிட்டால், பற்று, வெறியாகிவிடுமல்லவா......

கருத்தூரார்:

அடா அடா! என்ன புத்தி கூர்மை! என்ன நேர்த்தியான அறிவுத்திறன்! இங்கு இன்று உள்ளது பற்றுத்தான் — ஆனால் இது வெறி ஆகிவிடக்கூடுமே என்பதற்காக, இப்போதே கண்டிக்கிறோம் என்கிறீர்கள். ஆனால் அங்கே வெறியே தலைவிரித்தாடுகிறது, பார்த்துக்கொண்டு வாய்மூடிக்கிடக்கிறீர்கள். பண்டித ஜவஹரும் மற்றவர்களும், இந்த மொழிவெறிகொண்டு

அலைபவர்களை, ஆர்ப்பரிப்பவர்களைக் கண்டித்தால் என்ன? ஏன் கண்டிக்கவில்லை?

கதருரார்:-

கண்டிக்கவேண்டியதுதான்......ஆனால், மொழிப்பற்றுக் காரணமாகத்தான் அவர்கள் கட்டுக்கு மீறியசில காரியம் செய்துவிடுகிறார்கள் என்பதை மறந்துவிட முடியுமா......

கருத்தூரார்:

இது உலகம் உச்சிமேல்வைத்து மெச்சத்தக்க நியாயபுத்தி ஐயா! ஏனய்யா இப்படித் துணிந்து அக்ரமம் செய்கிறீர்கள்! அங்கே உள்ளவர்களின் மொழி வெறியை மொழிப்பற்று என்று கூறுகிறீர்கள், இங்கே உள்ளவர்களின் மொழிப்பற்றை மொழி வெறி என்று தூற்றுகிறீர்கள். நியாயமாக நடப்பதே இல்லை என்று முடிவு கட்டிக்கொண்டுதான் பொதுவாழ்வுத்துறையிலே இருக்கிறீர்களா!

கதருரார்:

கட்டுக்கு அடங்கி இருக்கும் வரையில், மொழிப்பற்று...கட்டுக்கு மீறிப்போகும்போது மொழிவெறி......

கருத்தூரார்:

இந்த இலக்கணம் எல்லோருக்கும் தெரியும். இங்கு மொழிப்பற்றுக் காரணமாக, தண்டல்நாயகம் போன்ற தூய தமிழ்ச் சொற்களைப் புகுத்தினால், மொழிப்பித்துக் கூடாது என்று பேசவும் எழுதவும் மேதாவிகள் புறப்படுகிறார்கள். அங்கு மொழி வெறி காரணமாக, கவர்னர்கள் உரைநிகழ்த்த முடியாதபடி கலாம் விளைவிக்கிறார்கள் இந்திக்காரர்கள்; 'பற்று' என்றுகூறி, மழுப்புகிறீர்கள் அந்தப் போக்குக்கண்டு. காரணம்? பயம்!

கதருரார்:

திரும்பத்திரும்பப் பயம், பயம் என்று பேசிக் கேலி செய்யவேண்டாம். ஏன் ஏற்படப்போகிறது? பயந்த சுபாவக்காரராக நாங்கள் இருந்தால், இங்கு தமிழ்ப்பற்று என்ற காரணம் காட்டிக்கொண்டு, உந்துவண்டி, பொறியர், காவலர் இல்லம், தண்டல்நாயகம் என்றெல்லாம், புதுப்புதுச் சொற்களைப் புகுத்துபவர்களைக் கண்டித்திருப்போமா?

கருத்தூரார்:

இங்கு உள்ளவர்களைக் கண்டிப்பீர்கள், பயமின்றி! அதுதான் தெரியுமே. ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்பார்கள். அதுபோல் இது. இந்தத் தமிழ் மக்கள் நம்மை ஏதும் செய்யமாட்டார்கள்; எதையும் தாங்கிக்கொள்வார்கள்; எவ்வளவும் கண்டிக்கலாம் என்ற தைரியம். இன்னா செய்தாரை இனிய முறையில் நடத்தச்சொல்லி வள்ளுவர் கூறிவிட்டாரே—அதுவேறு உங்களுக்குச் சாதகமாகிவிட்டது. ஆகவே பயமின்றித் தூற்றுகிறீர்கள், தமிழ்ப்பற்றுக்கொண்டவர்களை இங்கு. அங்கே முடியாதே!!

கதருரார்:

அங்குமட்டும் என்னவாம்? என்னசெய்துவிடுவார்கள், அவர்கள்மட்டும்?

கருத்தூரார்:

கவர்னர்களே படாதபாடுபட்டார்களே, அந்த மொழி வெறியாளர்களிடம் சிக்கி.

கதருரார்:

அதைச் சொல்கிறீரா — கூச்சலிட்டார்களே, அதை?

கருத்தூரார்:

ஏன், அது போதாது என்கிறீரா? கூச்சல்தானே போட்டார்கள், குத்து வெட்டு இல்லையே என்கிறீரா? அதுவும் நடக்கும், அவர்கள் விரும்பினால். பார்த்தோமல்லவா, சென்ற ஆண்டு மொழி வெறி காரணமாக, அசாமியருக்கும், வங்காளிகளுக்கும் நடந்த குத்துவெட்டு, கொலை கொள்ளை போன்ற கொடுமைகளை. எதெதற்கோ, தாவிக் குதித்துக் கண்டிக்கிற உம் போன்றவர்கள் காட்டுமிராண்டித்தனமாகச் செயல்கள் நடந்தபோது என்ன செய்தீர்கள்? பொறுமை! பொறுமை! என்று உபதேசம் செய்தீர்கள். கண்டிக்கத் துணிவு இல்லை. இங்கு சுவாமி வேதாசலம் மறைமலை அடிகள் என்று ஆகிவிட்டது கண்டு அண்டம் அதிரக் கூச்சலிட்டுக் கண்டித்தீர்கள். இங்கு தமிழ்ப்பற்று உள்ளவர்கள், கட்டுக்கு மீறிநடப்பது இல்லை—ஆனால் அவர்களைத்தான் கண்டிக்கிறீர்கள், மிரட்டுகிறீர்கள். மொழிப்பற்றுக் காரணமாக இங்கு, என்றாவது, ஒரு சிறு கலகம் எழுந்ததா? அங்கு, எந்தத் தகராறு கிளம்பட்டும், உடனே கொள்ளை கொலை, தீயிடல், இவ்வளவும் நடக்கிறது. அங்கு உள்ள தலைவர்கள் கலகம் செய்பவர்களை, வேண்டிக் கேட்டுக்கொள்கிறார்கள், கெஞ்சுகிறார்கள், கொஞ்சுகிறார்கள், சமரசம் பேசுகிறார்கள்! இங்கு? ஒரு சிறு கலகம் கண்டால் போதும், துப்பாக்கி பேசுகிறது!!

கதருரார்:

சட்டம் வேலை செய்கிறது, அமைதி காத்திட......

கருத்தூரார்:

ஆமாம்! இங்கு! அங்கு? இரயிலை நிறுத்திக் கொள்ளையடிக்கிறார்கள்; சட்டம், மெல்ல மெல்ல, தள்ளாடித் தள்ளாடி நடந்து வருகிறது, குற்றவாளியைத் தேடிக்கொண்டு ...... இப்போது நெருக்கடி நிலைமை. பகைவன் எல்லையில் நிற்கிறான் மோப்பம் பிடித்தபடி. இந்த நேரத்தில், இரயிலில் புகுந்து கலகம் செய்ய, கொள்ளை அடிக்க மனம் வருகிறது, சிலருக்கு......

கதருரார்:

அது தவறுதான்! எப்படிப்பட்ட சமயத்தில் இந்த நடவடிக்கை.........

கருத்தூரார்:

இங்கு, போர் ஆதரவு முயற்சியில் அனைவரும் ஒன்றுபட்டு ஈடுபடவேண்டும் என்ற நோக்கத்துக்காக,

கட்சிகளுக்குள்ளே மனக்கசப்பு இருக்கக்கூடாது என்று, தி. மு. கழகத்தினர், கவர்னர் உரை நிகழ்த்தும் போது, விழாவில் கலந்து இருந்தனர் — கண்ணியத்துடன். ஆனால் பீகாரிலும் உத்தரப்பிரதேசத்திலும், இந்தி மொழியல்லாத மொழிகள் பேசுவோர்களின் மனதில் கசப்புணர்ச்சி ஏற்படும்படி, மொழிவெறி காட்டினர் இந்தி மொழியினர். நீங்கள் அதைக் கண்டிக்கவும் துணிவு கொள்ளவில்லை, தி. மு. கழகம், கட்சிகளிடையே கசப்புணர்ச்சி ஏற்படக் கூடாது என்பதற்காக, கவர்னர் உரை நிகழ்ச்சியில் கலந்து கொண்டதற்கு ஒரு பாராட்டும் தெரிவிக்கவில்லை. நல்லதைப் பாராட்டும் நற்பண்பும் காணோம், தீயதைக் கண்டிக்கும் துணிவும் இல்லை.........

கதரூரார்:

தி. மு. கழகப் போக்கிலே திருப்தியும் மகிழ்ச்சியும் தெரிவித்தாரே மந்திரி பக்தவத்சலம்.........

கருத்தூரார்:

பார்த்தேன் பத்திரிகையில்! ஆனால் அதிலேகூட, என்ன மனப்போக்குக் காட்டினார் அமைச்சர். நான் சென்ற ஆண்டே புத்திமதி கூறினேன் என்று சுட்டிக் காட்டித் தி. மு. கழகம் ஏதோ, ஒரு தவறு செய்து வந்ததுபோலவும் இப்போது அதைத் திருத்திக்கொண்டது போலவும் பேசினார்.

கதரூரார்:

ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாகப் பேசுவார்கள்–இயல்பு அது. அதற்கெல்லாம், புட்டுப் புட்டுப் பொருள் காண முனையலாமா?

கருத்தூரார்:

அப்படிப் பொருள் காண முனையவுமில்லை—ஒவ்வொன்றையும் புட்டுப் புட்டுக் காட்டவுமில்லை. அப்படிச் செய்வதானால், இராமரிடம் காண்டீபம் இருந்ததாகக் கூட ஒரு காங்கிரஸ்காரர் பேசினார், அதை எடுத்து வைத்துக் கொண்டுகூடத்தான் வேடிக்கை பேசலாம். பேசவில்லையே! ஒரு அமைச்சர், நல்லது நடக்கும்போது நாலு நல்ல வார்த்தை சொல்லும் பண்பு கொள்ள வேண்டுமே என்பதைக் காட்டத்தான் அமைச்சர் பக்தவத்சலம் அவர்களின் பேச்சைக் குறித்துக் கூறினேன்.

கதரூரார்:

நான்கூடப் பார்த்தேன் மந்திரி பக்தவத்சலம் அவர்கள் தி. மு. கழகத்துக்கு ஆதரவு காட்டினதாக...

கருத்தூரார்:

இப்படித்தான் இட்டுக்கட்டிப் பேசி எரிச்சலை மூட்டுகிறார்கள்.........

கதரூரார்:

இட்டுக்கட்டு என்ன இருக்கிறது இதிலே. மேயர், தி. மு. கழகத்தார்தானே இப்போது. அது மந்திரியார் ஏற்பாடுதானே.

கருத்தூரார்:

ஏற்பாடு என்று சொன்னால், ஆமாம் என்று ஒப்புக்கொள்ளலாம். ஆனால் சிலபேர், அவருடைய தயவால், தி. மு. க. மேயர் வந்ததாகப் பேசி, அதன் மூலம் தங்கள் மன அரிப்பு அடங்க வழி தேடிக்கொண்டார்கள்—முறையா அது? இதிலே தயவு என்ன வேண்டி இருக்கிறது, தயவு! போட்டி, புகைச்சல் வேண்டாம் என்றார் அமைச்சர். தி. மு. கழகம் ஒரு பெரியவர் யோசனை சொல்கிறாரே, அதுவும் நியாயமான யோசனையாக இருக்கிறதே என்று எண்ணி, விளக்கம் கேட்டது; தந்தார்; ஏற்பாடு நடைபெற்றது. தி. மு. கழகம் மேயர் பதவி கிடைக்குமா கிடைக்குமா என்று ஏங்கித் தவித்துக்கொண்டு இருந்தது போலவும், கிடைப்பதற்கு வழி இல்லாமல் போனது போலவும், அமைச்சர் பக்தவத்சலம், பெரிய மனது வைத்துத் தயவு காட்டியது போலவும், அழுகிற குழந்தைக்குத் தின்பண்டம் கொடுப்பதுபோல, தி. மு. கழகத்துக்கு மேயர் பதவி வாங்கிக் கொடுத்தது போலவும்............

கதரூரார்:

இப்படி எல்லாமா பேசினார்கள் — ஒன்றை ஒன்பதாக்கிப் பேசலாமா?

கருத்தூரார்:

நான் பேசுகிறேனா, ஒன்றை ஒன்பதுஆக்கி? பேசினார்களய்யா, இதுபோல. தி. மு. கழகம், போர் ஆதரவு முயற்சிக்கு ஒத்துழைப்பதுகண்டு, நல்ல பிள்ளைகளாகி விட்டார்கள் என்று மகிழ்ந்து, பரிசுகொடுப்பதுபோல, பக்தவத்சலம், மேயர்பதவியை வாங்கிக்கொடுத்தாராம். நாடு பாதுகாக்கப்படவேண்டும், அந்நியன் விரட்டப்படவேண்டும், பகைவன் முறியடிக்கப்படவேண்டும் என்பதற்காக தி. மு. க. ஒத்துழைப்புத் தருகிறது. அமைச்சர் பக்தவத்சலத்துக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? இந்தியா என்ன அமைச்சருடைய, ஜெமீனா! நம்முடைய ஜெமீனுக்கு வர இருந்த ஆபத்தைத் தடுக்க தி. மு. க. ஒத்துழைக்கிறதே என்பதுபற்றி எண்ணி, மகிழ்ந்து, தின்பண்டம் தர......

கதரூரார்:

சும்மா ஒரு பேச்சுக்கு யாரோ சொன்னால், அதற்காக இவ்வளவு கோபமாகொள்வது?

கருத்தூரார்:

கோபம் இல்லை! சிலபேர்களுக்குத் தோன்றுகிற எண்ணத்தைப் பார்க்கும்போது, எரிச்சல் ஏற்படவில்லையா? அதற்காகச் சொன்னேன். தி. மு. கழகத்துக்குத் தின்பண்டம் கொடுத்தாராம்!! எதிர்க்கட்சியான தி. மு. கழகத்துக்கே தின்பண்டம் கொடுப்பவர் அமைச்சர் பக்தவத்சலம் என்றால், அவருடைய சொந்தக் கட்சிக்காரர் வாய்சுவைக்க என்னென்ன தின்பண்

டம் கொடுத்திருப்பார், என்னென்ன சுவைத்தீர்கள், எப்படி இருந்தது சுவை என்று, சின்னத்தனமாகப் பேசுபவர்களைப் பார்த்து, தி. மு. க. கேட்குமா, கேட்காதா......

கதரூரார்:

பெரிய பிரச்சினையாக்கிவிடுகிறீர் சின்ன விஷயத்தை.........

கருத்தூரார்:

நான் ஆக்கவில்லை. சின்ன விஷயத்தைப் பெரிய பிரச்சினையாக்கினுர்கள், காங்கிரசிலுள்ள சிலர். சட்ட சபையிலே தி. மு. கழக உறுப்பினர், தடைச்சட்டம் பற்றிப் பேசும்போது, அது எமன் வீசும் பாசக்கயிறு போன்றது! அந்தப் பாசக்கயிறு வீசப்படுவதால், தி. மு. கழகம் இறந்துபடுமா அல்லது மார்க்கண்டேயன் போலச் சிரஞ்சீவியாக இருக்குமா என்பது இனித்தான் தெரியும் என்று பேசினுர்......

கதரூரார்:

படித்தேன் பத்திரிகையில் ...... முல்லை வடிவேலு எம். எல். ஏ. பேசினுர் அப்படி, இல்லையா......?

கருத்தூரார்:

ஆமாம்! இதற்குப் பதில்கூறினுர் காங்கிரசார் ஒருவர். என்னதெரியுமா? பாசக்கயிற்றிலிருந்து, தி. மு. கழகம் தப்பவேண்டுமானுல், மார்க்கண்டேயன் சிவலிங்கத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டதுபோல, மந்திரி பக்தவத்சலம் அவர்களைக் கட்டிப்பிடித்துக்கொண்டால் போதும், என்ருர்.

கதரூரார்:

ஆமாம், அதையும் படித்தேன் பத்திரிகையில். இதிலென்ன தவறு?

கருத்தூரார்:

தவறு இல்லை. ஆனுல் நையாண்டி அல்லவா இது? தி. மு. கழகம், அமைச்சர் பக்தவத்சலத்தின் தயவால் தான் பிழைக்கமுடியும் என்று குத்திக்காட்டும் பேச்சல்லவா?

கதரூரார்:

அதெல்லாம் இல்லையப்பா. கழக எம். எல். ஏ. மார்க்கண்டேயன் கதை சொன்னுர்; காங்கிரஸ் எம். எல். ஏ. அந்தக்கதையின் இன்னெருபகுதியைச் சொன்னுர். கேலியுமில்லை, கிண்டலுமில்லை......

கருத்தூரார்:

அப்படியானுல், ஐயா! அதே கதையைத் தொடர்ந்துபேசி, அமைச்சர் பக்தவத்சலத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டால் பிழைத்திடலாம் என்று அன்பர் கூறுகிருர், மார்க்கண்டேயன் சிவலிங்கத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்ட கதையையும் காட்டினுர். கதையின்படி, மார்க்கண்டேயன் சிவலிங்கத்தைக் கட்டிப்பிடித்ததும் என்ன நடந்தது என்ருல், இலிங்கம் வெடித்து, உள்ளே இருந்து பரமசிவன் வெளிவந்து, பாசக்கயிறு வீசிய எமனை எட்டிக் காலால் உதைத்தார்; அதன்படி நடப்பதானுல், அமைச்சர் பக்தவத்சலம், டில்லி சர்க்காரின் உத்தரவை எட்டிக்காலால் உதைக்கவேண்டும். உதைப்பாரா? என்று ஒரு கழகத் தோழர் எடுத்துக் கூறினுல்........

கதரூரார்:

உன்னேடு பேச என்ருல் ஆகாது அப்பனே! நீ, பெரிய இடத்து விவகாரத்தை எல்லாம் எடுத்துக் கொள்கிருய். வம்பிலே மாட்டிவிடுவாய்.

கருத்தூரார்:

இதுதான் உமது போக்கு. பெரிய இடம் எது செய்தாலும் எதிர்த்துப் பேச வாய் இருக்காது! சாமான்யர்கள் கிடைத்தால், சக்கைப் போடு போடுவீர்கள். அதனுல்தான், பீகாரிலும், உத்தரப் பிரதேசத்திலும் இந்திமொழி வெறி அப்படித் தலைவிரித்து ஆடிற்று! கேட்பார் இல்லை; கண்டிப்பார் இல்லை.

கதரூரார்:

நான் வருகிறேன் அப்பா! எனக்கு வேறு வேலை இருக்கிறது.

கருத்தூரார்:

புறப்படும், புறப்படும். என்ன வேலையாகக் கிளம்புவீர்; தெரியாதா! தி. மு. கழகத்தை ஏசிப் பேசி, பெரிய இடங்களை மகிழச் செய்யும் வேலைக்குத்தான்! போய்ப் பேசும்! இந்த நெருக்கடி நிலைமை தீருகிற வரையில், கொண்டாட்டம்தான், உம் போன்ருருக்கு. ஏனெனில், தி. மு. கழகம், பிரச்சினைகளைக் கிளறி, விவாதம் ஏற்படுததி, மனக்கசப்பு உண்டாக்க இது அல்ல நேரம், பகைவன் இன்னமும் எல்லையில் நிற்கிருன், இப்போது ஒன்றுபட்ட நோக்கம், தோழமை உணர்ச்சி, இருக்கவேண்டும் என்று கருதுகிறது. யார் என்ன ஏசினுலும் பொறுத்துக் கொள்கிறது! உம் போன்ருர்பாடு கொண்டாட்டம்! நடக்கட்டும், நடக்கட்டும், நாக்கிலே உள்ள ஈரம் உலருமட்டும் பேசுங்கள், நெஞ்சிலே உள்ள குரோதம் தீருமட்டும் பேசுங்கள். தி. மு. கழகம் எத்தனையோ ஏசல்களைத் தாங்கிக் கொண்டிருக்கிறது; இதனையும் தாங்கிக் கொள்ளும்.

[இதமூரார் வருகிருர், பேச்சைக் கேட்டுக்கொண்டே.]

இதமூரார்:

எப்படி ஐயா! தாங்கிக்கொள்ள முடியும். இப்படிப் பட்ட கேவலத்தை. கொடுமையை......

கதரூரார்:

எதைப்பற்றி இப்படிப் பேசுகிறீர் — புரியவில்லையே......

இதமூரார்:

டில்லி பாராளுமன்றத்திலே நடந்தது பற்றித்தானே நீங்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்தீர்கள்?

கதரூரார்:

இல்லையே! பார்லிமென்ட் விஷயமாகப் பேசவில்லையே......

கருத்தூரார்:

பாராளுமன்றத்தில் என்ன நடந்தது?

இதமூரார்:

ஓ! உங்களுக்கு அந்த விஷயமே தெரியாதா? குடிஅரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் பேருரை நிகழ்த்தினுர் — அவர் அந்த உரையை இந்தியிலே

நிகழ்ந்தவில்லை என்பதற்காக, வெளிநடப்புச் செய்தார்கள்......

கதரூரார்:

ஜனாதிபதி பேசும்போதா, வெளிநடப்பு? அக்ரமமாக இருக்கிறதே! அநியாயமாக இருக்கிறதே!!

கருத்தூரார்:

வெளிநடப்புச் செய்தவர்கள் எந்தக் கட்சிக்காரர்கள்?

கதரூரார்:

எந்தக் கட்சிக்காரராக இருந்தால் என்னய்யா? ஜனாதிபதி, கட்சிகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவர் — மேம்பட்டவர் அல்லவா......

கருத்தூரார்:

எல்லாக் கட்சிகளுக்கும் பொதுவானவர் குடிஅரசுத் தலைவர்......

இதழூரார்:

சோஷியலிஸ்டுகள்தான் வெளிநடப்புச் செய்தார்கள். இத்தனைக்கும் டாக்டர் இராதாகிருஷ்ணனே சொன்னார், இந்திமொழியிலேயும் என் பேருரை படிக்கப்படும் என்று.

கதரூரார்:

சொல்லியும் கேட்கவில்லை. என்னய்யா அக்ரமம்.

கருத்தூரார்:

முக்கியமான விஷயத்தைக் கவனித்துப் பாருமய்யா கதரூராரே! சோஷியலிஸ்டுகள் என்றால், சமதர்மம் பற்றி அல்லவா அதிகமான அக்கரை காட்டவேண்டும்? இவர்களுடைய அக்கரை எதிலே சென்றது கவனித்தீரா? இந்திமொழிமீது!

கதரூரார்:

இந்திமொழிமீது அக்கரை இருக்கட்டும்; அதற்காகப் பார்லிமென்ட்டின் புனிதமான சம்பிரதாயத்தையா பாழாக்குவது. ஜனாதிபதி என்ன, இந்தி மொழிக்கு விரோதியா? அவரை அவமதிப்பதுபோல, வெளிநடப்பு நடத்துவது முறையா......?

இதழூரார்:

இப்போதுதான் டெலிபோன் மூலமாகச் செய்தி கிடைத்தது எனக்கு. பதறிவிட்டேன், போங்களேன்...

கதரூரார்:

கருத்தூராரே! நீர் சொன்னது முற்றிலும் உண்மை. இப்படிப்பட்ட போக்கைக் கண்டிப்பாக அனுமதிக்கக் கூடாது.

கருத்தூரார்:

பீகாரில் நடந்தபோதே, கண்டனம் கிளம்பி இருந்தால், குடிஅரசுத் தலைவருக்கு மரியாதை காட்டாத போக்கு, கிளம்பி இருக்குமா?

கதரூரார்:

உண்மைதான், கருத்தூராரே! நமக்குள் ஆயிரத்தெட்டு விஷயங்களிலே அபிப்பிராயபேதம் இருந்தாலும், இந்த இந்திமொழி ஆதிக்க வெறி பிடித்தவர்களை எதிர்த்து நிற்பதிலே மட்டும், நாம் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். குடிஅரசுத் தலைவரையே துச்சமென்று கருதும் அளவுக்கு நடந்துகொண்டிருக்கிறார்கள்.

இதழூரார்:

பண்டித நேருவுக்குக்கூட, ரொம்பக் கோபமாம்— மனவருத்தமாம்.

கதரூரார்:

இருக்காதா என்ன? ஆனால் பண்டிதர் இந்தப் போக்கினரை அவ்வப்போது அடக்கி இருக்கவேண்டும் –அதைத்தான் கருத்தூரார் சொல்லிக்கொண்டிருந்தார் நீங்கள் வருகிறபோது.

இதழூரார்:

நாமெல்லாம் ஒன்றாகி, இதுபற்றி, நல்லறிவு பிறக்கும்படிச் செய்யவேண்டும்.

கருத்தூரார்:

இந்த மனப்பாங்கு நிலைத்திருக்குமானால் நமது உரிமைகள் பாழ்படாது, நிச்சயமாக.

★

6-ம் பக்கத் தொடர்ச்சி

வாழவும்வேண்டும் வாழ்விக்கவும்வேண்டும் என்னும்போது, உண்ணவும்வேண்டும், உண்டி கொடுத்திடவும்வேண்டும் என்பது பொருள்.

இவ்வளவுக்கும் பொருள் உண்டா என்று ஐயப்பாடுகொள்ளத் தேவையில்லை, பொருளின் அளவு உழைப்பின் அளவாகிறது!! அந்த உழைப்பினையும் மிகுதியான பயன் பெறத்தக்கதாக்கிட விஞ்ஞான நுண்ணறிவு வழி காட்டுகிறது. அந்த நுண்ணறிவு நாளும் வளர்ந்தும் வருகிறது. எனவே அனைவரும் பகிர்ந்துண்ணும் அளவுக்கு, பார் ஓர் வளமான இடமா என்ற கேள்வியே எழத் தேவையில்லை.

அதற்கேற்ற உழைப்பும், உற்பத்தி அனைவரிடமும் சென்று பயனளிக்கத்தக்க பகிர்ந்தளிக்கும் முறையும், இதனைக்காத்திடவும் ஊக்கிடவும் கடமை மேற்கொண்ட நல்லரசும் தேவை. எனவே பசி போக்கிடுவோம் என்றால் அன்னதானம் செய்திடுவோம், என்பதல்ல; நல்லரசு அமைத்திடுவோம், அல்லது அரசு நல்அரசு ஆக வழி கண்டிடுவோம் என்பதாகும். மார்ச்சு ஆறும் நாள் இந்த மாண்புமிகு கொள்கைபற்றிப் பேசிப் பயன் காணவும், செயலார்வம் காட்டவுமான நாளாகக் குறிக்கப்பட்டுள்ளது.

பசி, பிணி, பகையற்றதாக நாடு இருந்திட அவரவரும் அவரவரது அறிவாற்றலை வழங்கிட முன்வருதல் வேண்டும். நாடு எனும் நல்லிலக்கணத்துக்கு ஏற்ற முறையில், நாம் இருக்கும் இடம் மாறிடவேண்டும்; என்னமோ இருக்கிறேன் என்ற இழுப்புப் பேச்சுமாறி, வாழ்கிறேன், வாழ்விக்கிறேன் என்று எக்களிப்புடன் கூறிடும் ஏற்றமிகு நிலையினை நாம் அனைவரும் பெறுதல் வேண்டும்.

அந்தச் சீரிய குறிக்கோளை எடுத்துக்காட்டும் ஏற்புடைய நாளே, மார்ச்சு ஆறும் நாள்.

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

"அது இருக்கட்டும். மாதர்மன்றக் கூட்டத்தில் கலந்துகொண்டாயே, அங்கு என்ன தீர்மானங்கள் நிறைவேறின"

"பாரதி பிறந்தநாள் விழாவைச் சிறப்பாகக் கொண்டாட மாதர்சங்கம் முடிவு செய்திருக்கிறது"

"அது அல்லவா மாதர் மன்றம்" கைகளை உயரத்தூக்கியவண்ணம் உயர்வான குரலில் கூறினன்.

"அத்தான்......"

"என்ன கோமு?"

"நான் உங்களுக்கு ஒருவேண்டுகோள் விடுக்கப்போகிறேன்'

"ஓகோ! இதுதான் தெரியாதா என்ன. உங்கள் விழாவில் நான் கலந்துகொள்ளவேண்டும், அவ்வளவு தானே?"

"ஆம்; அதுமட்டுமல்ல. நீங்கள் தான் தலைமை தாங்கவேண்டும்" உதட்டைச் சப்பியவண்ணம் மகிழ்ச்சி பொங்கக் கூறினள்.

"பெண்கள் மன்றத்தில் ஆண்களுக்கு......',

"அந்தப்பேதம் எங்களிடமில்லை இப்போது. ஒருத்தருக்கொருத்தர் விட்டுக்கொடுத்துப் போகணும் என்று எங்கள் தலைவி சொன்னுங்க."

"நீதான் என்னை அழைக்க விரும்பிச் சொன்னுயா?"

"இல்லை. எங்கள் தலைவியே இதைச் சொன்னர்கள். நான் அப்படியே அசந்துவிட்டேன். அதற்காக நம்ம வீட்டுக்கு நாளை வருவாங்களாம்"

பாரதியின் பிறந்தநாள் அன்று மாதர் சங்கத்தின் விழா ஏற்பாடுகள தீவிரமான முறையில் நடந்திருந்தது கூட்டம் கூட்டமாக மக்கள் பாரதியின் நினைவுப் பொருட்காட்சியைக் கண்டு, களித்தும் கலையாமலும் சென்றுகொண்டிருந்தனர். மாலையில் நடக்கும் கூட்டத்துக்குப் பெரிய அமைப்பில் பந்தல் போடப்பட்டிருந்தது.

மாலை நெருங்க நெருங்க கோமதி தன் வீட்டில் தன்னை மிகவும் நேர்த்தியான முறையில் அலங்கரித்துக் கொண்டாள். அழகே அவளிடம குடிபுகுந்தது எனலாம். தன் அழகு அலங்கரிப்பை அன்பன் காணவேண்டும் என்பதற்காக அவனருகில் சென்று "எல்லாவற்றையும் விரிவான முறையில் பேசணும்; பேசணும், ஆமா!" என்ருள்.

"நீ என்ன இன்னும் பாதிகூட அலங்கரிக்கவில்லையே ஏன்?" கிண்டலாக அவளைப்பார்த்துச் சொன்னுன்.

நாணம் அவளுக்கு வந்துவிட்டது. நாகரிகமான முறையில் தன்னை அலங்கரித்துக்கொண்டதால் ஏற்பட்ட விளைவோ இந்நாணம் என எண்ண வேண்டியதாகியது.

"கோமு" என்று அழைத்தான்.

"அத்தான்"

"உன்னைப்பற்றி நான் எதைச் சொல்வது. கற்பனையாகக்கூட உன் அலங்கரிப்பையும், வதனத்தையும் நான் கண்டதில்லையே, என் ஏடெழுதும் கற்பனையில்..."

அவள் அசைவின்றி அவனையே உற்றுநோக்கியவண்ணம் இருந்தாள்.

"சரிசரி, நேரமாகுது கிளம்பு" என்று கூறி வீட்டைவிட்டு வெளியேறினன்.

அவளும் அவனைத் தொடர்ந்து சென்ருள்

மேடையில் எழுத்தாளன் மணாளன் வீற்றிருந்தான். தோழமுவுக்கு மகிழ்ச்சி அடக்க முடியவில்லை. தலைமை உரை ஆற்ற எழுந்தான். மழவன்.

"சகோதரிகளே! உங்களை வைத்துக்கொண்டு பாரதியைப்பற்றிப் பேசுவதில் நான் மகிழ்வு கொள்கிறேன். இன்றைய நமது வரலாற்றிலே பெண்களைப்பற்றி அக்கரை கொண்ட பெண்கள் ஒருவர் அல்லது இருவரே! பெண்களின் முன்னேற்றத்தை விரும்பிய ஆண்களையும் விரல் விட்டு எண்ணிவிடலாம் அதிலே பாரதிமுதல்தரமான ஓர் புனிதமனிதர். பெண்கள் வாழ்ந்த கூடா வாழ்க்கையைச் சாடினர் பெண்ணினத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் உலகச் சமுதாயத்தைச் சாடினர். பெருமை பெற்ற பாரதியைப்பற்றிப் பேசிய பின், இக்காலப் பெண்களின் முக்யத்துவத்தைப்பற்றிப் பேசினன். பெண்களின் கடமை, நாட்டுப் பணி, தன்னலமற்ற பொதுச் சேவை, பொதுநலம் எது? தன்னலம் எது? கடமையின் இலக்கணம்! உரிமை!—அதன் மேல் நாட்டங்கொள்ள வேண்டியவர் யார்? உரிமையைப் பெறத் தகுதி படைத்தவர் யார்? இவைகளெல்லாவற்றையும் தெள்ளத் தெளிவாக விளக்கிப் பேசினன்.


# "Carry on! But Remember....!!"

★

## C. N. A.
**On**
**Freedom of Speech**
**at the**
**RAJYA SABHA**

★

[ அறிஞர் அண்ணு அவர்கள் மாநிலங்கள் அவையில் 25-1-63 அன்று பிரிவினைத் தடைச் சட்ட மசோதா பற்றிய விவாதத்தில் கலந்துகொண்டு ஆற்றிய ஆங்கிலப் பேருரையும் அதன் தமிழாக்கமும்]

**விலை 75 காசுகள்**

விபரங்கட்கு:
சுகுமாரன் பதிப்பகம்
80, சி. எஸ். செட்டித் தெரு — சின்ன காஞ்சிபுரம்.

"சமுதாயத்தை ஆளப்பிறந்த பெண்ணினம், இன்றுஅடுப்பங்கரைச் சுதந்தரத்தோடு நிறுத்தப்பட்டுவிட்டனர்........."

பேச்சினிடை விக்கல் ஒன்று வந்தது. நாற்காலியில் அமர்ந்தான். நெஞ்சைக் கையால் அழுத்திப் பிடித்துக்கொண்டான். கைகொட்டி அழகு தமிழ்ப் பேச்சை நுகர்ந்துகொண்டிருந்த ஆயிரத்துக்கு மேலான மக்களும் ஆ!வென அதிர்ந்தனர். கோமதிக்கு உள்ளம் துடிதுடித்தது. ஓடோடி வந்தாள்.

"கோமு" என ஒருமுறை அழைத்தான்.

குரலில் தெளிவில்லை. கூட்டம் திகைத்துப் போயிருந்த அந்த நேரத்திலேயே அவன் உயிர் காற்றில் கலந்து அங்கெலாம் நிரம்பியது. அழகு அழிய மயங்கி வீழ்ந்தாள் கோமு.

மூன்றும் நாள் மயக்கம் தெளிந்து தன் வீட்டுக்கு வந்தாள் கோமதி! விளக்கு ஏற்ற நாதியில்லை. இருண்ட வீட்டில் கால் வைத்து இதயத்தை கல்லாக்கிக்கொண்டாள்.

தனக்கு முன்னால் கிடந்த ஏராளமான பத்திரிகைப் பிரதிகளையும் கண்ணுல் நோக்கிச் சிரித்துக்கொண்டாள். அந்தச் சிரிப்பிலே உண்மைத் தெளிவு இல்லை.

'பாரதியும் — பெண்களும்' என்ற தலைப்பில் ஓர் கட்டுரை இதழ் அவள் கண்ணுக்குத் தெளிவாய்த் தெரிந்தது. அதை எடுத்துப் பார்த்தாள். தடித்த எழுத்துக்களில் மழவன் தன் கருத்தை அதில் சொல்லியிருந்தான்.

பெண்,தனிமனிதனுக்காகப்படைக்கப்பட்டவள் அல்ல. சமுதாயம் அவர்களைத் தண்டிக்கக்கூடாது. எந்த உரிமைக்கும் சொந்தம் கொண்டவர்கள். இல்லறத்திலேயே அவர்கள் வாழ்ந்திருக்க வேண்டும் என்பது பெருந்தவறு. தனி மனிதன் இன்ப துன்பங்களில் ஈடுபாடு கொண்டு வாழ்வதைவிடக் கோடிக்கணக்கான மக்களின் இன்பதுன்பங்களைப் பகிர்ந்து வாழ்வது மேல். இதைக் கண்ட கோமதி இயற்கை அழகையும், பழுத்த பண்பையும், சிறந்த பொது நல எண்ணத்தையும், சுமந்து கொண்டு கணவன் கனவை நினைவாக்கத் தொண்டு வாழ்வுக்குள் புகுந்தாள்!

★

# "நோய்க்கு இடம் கொடேல்"

—[ நிலவழகன் ]—

உடல் அவயங்களின் ஏதாவது ஒன்றுக்கு ஊறு—ஊனம் ஏற்படுகிறது. அதை—அப்படியே விட்டுவிட்டால் நாளைக்கு புரையோடி உடலுக்கே—ஏன்? உயிருக்கேகூட ஆபத்தாக முடியும்; முடிகிறது.

கையால் கிள்ளி எறியவேண்டியதைக் கட்டாரியால்—கோடரியால் வெட்டிச் சாய்க்க நேரிடுகிறது. காரணம் — அவை இருப்பதால் தீமை என்று.

காலில் தைக்கிறதே நெரிஞ்சுமுள்; அது முற்றாது முதிராது இருக்கும் போது காலிலோ—கையிலோ பட்டால் தைக்கும் அளவுக்கு அதனிடம் வளமில்லை. ஆனால்—முதிர்ந்தப்பின்: காய் முற்றியபின் "தேள்" எனக் கொட்டுகிறது. உயிரே போகுமளவுக்கு வேதனை. அதை எடுத்துத் தீயிலிடவேண்டும். இல்லை இனி இது யார் காலிலும் படாது என்று கருதி "அப்புறம் எறிவோமேயானால்—தொல்லை தரும்." நம்மை அறியாமலேயே அதன் வளர்ச்சிக்கு ஆக்கமளிப்பதாகும்.

நேற்று சிறு காயம்தானே பட்டது! ஒன்றும் செய்யாது என்று இருந்த பலன்—

ஒரு புதுக் காசுதானே திருடினான் என்று வாளா இருந்த பலன்; இனித் திருந்துவான் என்று இருந்த பலன்—

இன்று உடலின் உறுப்பையே வெட்டி எடுக்கவேண்டிய நிலை; வேறுபடுத்தப்படவேண்டிய நிலைக்குக் கொண்டுவந்து விட்டது — காலம். எதிர் பார்க்கப்படவில்லை இந்நிலைக்கு வரும் என்று. வேறுபடுத்தப்படுவது தான் நல்லது; அறிவுக்குகந்தது' அவனியும் ஏற்கும்.

ஐயயோ உடலின் ஒரு பாகத்தையா வெட்டி வீழ்த்துவது; வேருக்குவது என்று இருக்கக் கூடாது; இருந்தால் ஆபத்து. ஆட்டைக் கடித்து; மாட்டைக் கடித்து; கடைசியில் மனிதனையும் கடித்ததாம்—ஒரு "வெறி நாய்" என்று ஊரின் ஏளனத்துக்கு வரும். ஆட்டைக் கடித்த போதே அதன் கடைவாய்ப் பற்களை உடைத்திருக்க வேண்டும். அது புத்திசாலித்தனம். அன்று அப்படிச் செய்யாது விட்டது அறிவீனம்; அறியாமை என்று வாளா இருந்ததன் பலன்; இன்று கைமேல் கிட்டுகிறது. நாம் பெறத்தானே வேண்டும்? இதில் ஒன்றும் வியப்பில்லை! விந்தையில்லை!! ஆத்திரப்பட்டோ; அவசரப்பட்டோ செயல்பட வேண்டியதில்லை. நம்மை நாமே கெடுத்துக் கொண்ட வகை; நம் "அறியாமை".

அறிந்தவர் சொல்வதைக் கேட்டிருந்தால்; இது இப்படி ஏசலுக்கும் —ஏளனத்துக்கும் வருமா? வராது! என்று வருந்துகிறாள் தாய். அறியாமை—என்ற நோய் நம் உடலிலும் புகுந்திருக்கிறது. அன்று தெரியாத— சிறுபிள்ளைத்தனத்தால் "நீ என்ன சொல்வது; நான் என்ன கேட்பது" ஆடித்தான் திருவேன் என்று அவனை மணம் செய்துகொண்டேன்—

பட்டமரம் துளிர்க்கிறது—துளிர்க்கும்; கெட்ட குடி வாழும் என்றெல்லாம் எண்ணித்தான் மணந்தேன். ஆனால்; அவன்; பாதையிலிருந்து திரும்பவில்லை; திருந்தவில்லை. பழைய

**விற்பனையாளர்கட்கு:**

அதிக இதழ் தேவைப்படுவோர் புதன் கிழமைகளுள் தெரியப்படுத்தவும்.

✲

**சந்தாதாரர்கட்கு:**

சந்தா முடிந்தவுடன் சந்தாவைப் புதுப்பிக்கும் சந்தாதாரர்கள் சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடும்படி கேட்டுக் கொள்கிறோம்.

நிர்வாகி.

"கருப்பன் கருப்பனே" என்று இருக்கிறான். இந்த உலகில் வளமோடும்; பொலிவோடும் வாழ்வோம் என்று எண்ணுவதே இழுக்கு---அறியாமை அப்படி இருக்க அவன் நம்பாதைக்கு திரும்புவான் --- திருந்துவான் என்று எதிர்பார்த்தது --- பார்ப்பது, நம் அறியாமை. இன்று, மனக் கண்ணுடி உடையுமளவுக்கு நடத்தைகள்; நரித்தனச் செயல்கள் என்று கலங்குவது பேதைத்தனம்.

எதை; எதை; எங்கெங்கிருந்து பெற வேண்டுமோ அதை; அதை அங்கெங்கிருந்து பெற வேண்டும்; பெற்றால் பெருமை. சாணியை எடுத்து சந்தனம் என்று முகர்ந்தால்--முகர்வது இழுக்கு --- அறியாமை. இல்லை, சாக்கடை நீரை பன்னீராக்க முடியுமா? பன்னீராக்க முடியும் என்று எதிர் பார்ப்பது அறியாமை. இதைப் புலப்படுத்தத்தானே என்னவோ----

"உறுபசியும் ஓவாப் பிணியும்
செறு பகையும்
சேராதியல் வது நாடு"

என்றார் வள்ளுவப் பெருந்தகை.

அது-நாட்டைத் தாக்கினால்; நாடு-நசுங்கும்; நெளியும்; நிமிரமுடியாது நளிந்து, நளிந்துமடிந்துவிடும் என்பதை போக்க---விபரமறிந்தவர்கள் உண்ணுது; உறங்காது உழைக்கிறார்கள். காரணம்--நாடு நல்வாழ்வு வாழ இருள் அகல; இன்னல் விலக; இன்ப நடைபோட; போடவேண்டும் என்பதற்காக; அதற்கு மக்கள் உழைப்பு உயரவேண்டும்; உழைப்பு உயர்ந்தால் வாழ்வு--உயர்ந்து "வளம்" கொழிக்கும். உழைப்பு இருக்கிறது! உழைப்பை, அட்டைபோல் உறிஞ்சும் "விலை உயர்வு" இருக்கிறது!! இது, நாட்டை; குடும்பத்தை பாதிக்கும் நோய். இந்த நோய் பரவக் கூடாது என்று அரசுக்கு அறிவுறுத்துகிறார்கள். ஏற்க மறுக்கிறது அரசு. ஏனோ--தெரியவில்லை.

இரத்த ஓட்டம் உடலுக்கு நல்லது-ஊட்டமளிக்கும்; உறுதி தரும். அதுவே மிகுந்தால் "இரத்தக் கொதிப்பு" ஏற்படும். அப்படி ஏற்படுவது உடலுக்கல்லவா ஆபத்து. அதைப் போன்றதுதான் "விலை உயர்வு" அது, ஓர் நோய், அவசியம் அதற்கு மருந்திடவேண்டும்.

இன்று எல்லைக்காக சீறுகிறது--சீனம். இந்தச் சீற்றத்தை எதிர்த்து அடக்கவேண்டும். இல்லையேல்--உலக சீற்றமாக மாறும்; சிதறும்; சின்னு பின்னமடையும்; சீரழியும். இதன் சீற்றத்தை என்றோ "மட்டந்தட்டி" யிருக்கவேண்டும். அன்று----வாளா இருந்தோம்.

வெள்ளம் வந்தபின் அணைப்போடு வதைக்காட்டிலும் வருமுன்அறிந்து போடவேண்டும்--- போட்டிருக்க வேண்டும். அதுதான் சிறந்தது. அதைச் செய்திருந்தால் "சீன நோய்" கவலைக்குள்ளாக்குமா! அது உலகப் போராக; உலக நோயாக, ஆட்டிப்படைக்கும் வளர் நோயாக மாறுமா; என்ற பீதி இருக்காது. அதை ஔவைப் பாட்டியாரும்--

"நோய்க்கு இடங் கொடேல்"

என்றார்கள்.

நோய் வந்தபின் மருந்திட்டு உடலைப்பேணுவதைக்காட்டிலும், நோய் வராவண்ணம் உடலைக் காக்கவேண்டும்; எல்லையைக் காக்கவேண்டும்; நாட்டை, கண்ணை இமை காப்பது போல் காக்கவேண்டும்; நாம் பெற்ற சுதந்தரத்தைக் காக்கவேண்டும், இதுதான் நம் இலட்சியம். நம் இறுதி மூச்சுவரை; உடலிலே ஒரு சொட்டுக் குருதி ஓடும்வரை நாம் வரிந்துகட்டிக்கொண்டு, மார்தட்டி மண்ணே எதிர்த்தாலும் சரி; கடலே பொங்கி எழுந்தாலும் சரி; நம் இலட்சியத்தை இம்மியளவும் விட்டுக்கொக்கக் கூடாது. நம் மண்ணில் சீனம்--ஊசி நாட்ட இடங்கொடுக்கக் கூடாது. இதற்காக நாம் செங்குருதியைக் குடம் குடமாகக்கொட்ட, முனைந்து நிற்போம்! முறியடிப்போம்!!

○ தென்னக மெங்கும் திரண்ட வரவேற்பு!
○ கழகத் தோழர்கள் பாராட்டுகின்றனர்!
○ நாடு முழுவதும் முரசொலித்துப் பவனிவரும் கொள்கை ஏடு—

# "தென்னகத் தலைவன்"

இந்த வார இதழ் படிக்கத் தவறாதீர்கள்.

**"உன்னைத்தான் கேட்கிறேன் யார் நீ?"**

**"ஓடாதே நில்"**

**தென்னரசு தொடர்கதை**

விற்பனையாளர் இல்லாத ஊர்களுக்கு விற்பனையாளர் தேவை.

விவரங்களுக்கு:—

**"தென்னகத் தலைவன்"**

31, பார்த்தசாரதிப்பேட்டைத் தெரு, சென்னை—6.

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.




காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்